மேற்கண்ட 1 முதல் 6 இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘18.8.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.247/2008, நாள்:18.8.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

21.8.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண். 205/2008 , நாள்: 21.8.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: இ.பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ8/3965/2007

ஆணையர் அவர்களின் 14.08.2008 நாளிட்ட குறிப்பு

**27.08.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :468/2008 பொருள் எண்:62

**நிலமாற்றம்**

9வது மண்டல வார்டுகுழு தீர்மானம் எண்.78/2008 நாள் 26.03.2008ல் மண்டலம்–9, வார்டு எண்.130ல் கன்னிகாபுரம், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத் திட்டப்பகுதியில் கோடம்பாக்கம் கிராமம், பிளாக் எண்.95, நகர அளவை எண்.243 பாகத்தில் கிழக்கு மேற்காக 35 அடியும் வடக்கு தெற்காக 115 அடியும் மேற்படி புலத்தின் கிழக்குப்பகுதியில் காலியாக உள்ள தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு சொந்தமான நிலத்தினை சென்னை மாநகராட்சியின் பிற்கால வளர்ச்சி பணிகளுக்காக தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திடமிருந்து பெறுவதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து குடிசை பகுதி மாற்று வாரிய திட்டப்பகுதியிலுள்ள இந்த காலியிடம் எந்த பயன்பாட்டுக்காக தேவைப்படுகிறது என மண்டல அலுவலர்–9 அவர்களிடம் அறிக்கை கோரியதில், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு சொந்தமான மேற்படி நிலம் பயன்பாடின்றி காலியாக உள்ளதால், இந்த நிலத்தினை பெற்று சாலை விரிவாக்கம் செய்யலாமெனவும், பூங்கா அமைக்கலாமெனவும், நிலம் கிடைக்கப்பெற்றதும், இதற்கான திட்டங்களை செயல்படுத்தலாமெனவும் 13.06.2008 நாளிட்ட மண்டல அலுவலர்–9 அவர்களின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேற்படி நிலம் சார்–நில ஆய்வாளர் நிலம் மற்றும் உடைமைத்துறை அவர்களால் புலத்தணிக்கை செய்யப்பட்டு, இந்த நிலம் காலியாக இருப்பதாகவும், மாம்பலம்–கிண்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் நிரந்தர நிலப்பதிவேட்டில் மேற்படி நிலம் சர்க்கார் புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்டு, குறிப்பு கலத்தில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்–9ன் வார்டுகுழு தீர்மானத்தில் பரிந்துரைத்தவாறு கன்னிகாபுரம், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத் திட்டப்பகுதியில் கோடம்பாக்கம் கிராமம், பிளாக் எண்.95, நகரபுல எண்.243 பாகத்தில் காலியாக உள்ள 4025 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலத்தினை சாலை விரிவாக்கம் செய்வதற்காகவும், பூங்கா அமைப்பதற்காகவும், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திடமிருந்து இலவசமாக கோரி பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (வமநி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

21.8.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண். 206/2008 , நாள்: 21.8.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: நி.ம.உ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

## 27.08.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :469/2008 பொருள் எண்.63

### சட்டமன்ற உறுப்பினர் தொகுதி அலுவலகம் கட்டுவதற்கு இட ஒதுக்கீடு

17/08/2006 நாளிட்ட, 134/06–5 எண்ணிட்ட சட்டமன்றப் பேரவைச் செயலக கடிதத்தில் சட்ட மன்ற உறுப்பினர்கள் தொகுதி அலுவலகக் கட்டடம் கட்ட இட ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும் தியாகராயநகர் சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள், தொகுதி அலுவலகக் கட்டிடம் கட்ட மாநகராட்சிக்கு சொந்தமான இடம் கோட்டம் 127ல் உள்ளதாகவும், அவ்விடத்தில் கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்குமாறும் அதுவரை தொகுதி அலுவலகம் இயங்க கோட்டம் 120ல் உள்ள அறைகளை ஒதுக்கி தருமாறும் கேட்டுக்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி அலுவலகம் கட்டிடம் கட்ட தேர்வு செய்துள்ள மேற்படி இடத்தில் தொகுதி அலுவலகம் கட்ட இட ஒதுக்கீடு செய்வது குறித்து அறிக்கை அளிக்குமாறு மண்டல அலுவலர்–8 அவர்களை கேட்டுக்கொள்ளப்பட்டது.

சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கோட்டம் 127ல் காலியாக உள்ள இடத்தை பொதுப்பணித்துறை வசம் ஒப்படைத்தால் தியாகராயநகர் தொகுதிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு சட்ட மன்ற உறுப்பினர் அலுவலகம் கட்டப்படும் என்று 19.04.2007 நாளிட்ட பொதுப்பணித்துறையின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பொதுப்பணித்துறையினர் கோரியுள்ள மேற்படி இடத்தில் தியாகராயநகர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் கட்ட இட ஒதுக்கீடு சம்பந்தமாக கோரிக்கை விடுத்துள்ளதாலும், மேலும் இதனை சட்ட மன்ற அவைக்குழு 25.4.07 அன்று பரிசீலனை செய்து சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் கட்ட உடனடியாக மன்றத்தின் அனுமதி பெற்று பணியினை தொடங்க அறிவுறுத்தியுள்ளதாலும், இந்நிலத்திற்கு ஒரு விழுக்காடு தொகையினை வருட வாடகையாக பொதுப்பணித்துறை செலுத்த வேண்டும் என்ற நிபந்தனை விதித்து இந்நிலத்தினை பொதுப்பணித்துறை முன்னுழைவு செய்து பணியினை ஆரம்பிக்க உடனடியாக முன்னுழைவு அனுமதி வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பித்திட வார்டுகுழுவின் பரிந்துரை கோரப்பட்டது.

09.05.2007 நாளிட்ட, 240/2007 எண்ணிட்ட 8வது மண்டல வார்டு குழு தீர்மானத்தில் தியாகராய நகர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு மேற்படி இடத்தினை வழங்க இயலாது என்று நிராகரிக்கப்பட்டது. மேற்கண்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி அலுவலகம் கட்டிடம் கட்ட நில ஒதுக்கீடு செய்து முன்நுழைவு அனுமதி வழங்குவது குறித்து 8வது வார்டுகுழுவால் நிராகரிக்கப்பட்ட முடிவினை மறுபரிசீலனை செய்து முன்நுழைவு அனுமதி வழங்கிட மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டது. இதற்கு 28.05.2007 நாளிட்ட, 271/07 எண்ணிட்ட மன்ற தீர்மானத்தில் இப்பொருள் ஒத்திவைக்கப்படுகிறது என்று முடிவெடுக்கப்பட்டது.

மன்றத் தீர்மானத்தால் ஒத்திவைக்கப்பட்ட முடிவினை மறுபரிசீலனை செய்ய இப்பொருள் மீண்டும் வரிவிதிப்பு மற்றும் நிதி நிலைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதில் 8வது வார்டு குழுவில் நிறைவேற்றப்பட்ட பின்னர் சமர்ப்பிக்கவும் என்று 20.12.2007 நாளிட்ட 205/2007 எண்ணிட்ட வரிவிதிப்பு மற்றும் நிதி நிலைக்குழு தீர்மானத்தில் இப்பொருள் ஒத்திவைக்கப்படுகிறது என்று முடிவெடுக்கப்பட்டது.

19.05.2008 நாளிட்ட அரசு கடிதத்தில் தியாகராய நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.பி. கலைராஜன் அவர்கள் தனது தியாகராயநகர் தொகுதிக்கு தொகுதி அலுவலகம் கட்டித்தர உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளார் என்றும், சட்டமன்ற உறுப்பினர் கோரிக்கையின் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு நடவடிக்கை குறித்த விவரத்தினை சட்டமன்ற உறுப்பினருக்கும் அரசுக்கும் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

<u>நிமஉதுநகஎண்எல்இ4/1359/2007</u>

தற்போது சென்னை மாநகராட்சி மண்டலம்–8 வார்டு–127 வார்டு அலுவலக வளாகத்தில் தியாகராய நகர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் கட்ட மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தினை ஒதுக்கித்தர 04.07.2008 நாளிட்ட 444/2008 எண்ணிட்ட 8வது மண்டல வார்டுகுழு தீர்மானத்தில் பரிந்துரை அளிக்கப்பட்டுள்ளது.

எனவே தியாகராய நகர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலக கட்டிடம் கட்ட இடஒதுக்கீடு செய்வது குறித்து 271/07 எண்ணிட்ட மன்றத் தீர்மானத்தாலும் 205/07 எண்ணிட்ட தீர்மானம் மூலம் வரிவிதிப்பு மற்றும் நிதிநிலைக்குழுவாலும் ஒத்திவைக்கப்பட்ட முடிவினை மறுபரிசீலனை செய்து தியாகராய நகர் கிராமம் பிளாக் எண்.128 புல எண். 6777–ல் 1200 சதுர அடி நிலத்தில் பொதுப்பணித்துறை இந்நிலத்திற்கு ஒரு விழுக்காடு தொகையினை வருட வாடகையாக செலுத்த வேண்டும் என்ற நிபந்தனை விதித்து, முன்நுழைவு செய்து பணியினை ஆரம்பிக்க முன்நுழைவு அனுமதி வழங்குவது குறித்து மன்றத்தின் அனுமதியினை வேண்டி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

21.8.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண். 207/2008 , நாள்: 21.8.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: நி.ம.உ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**வ.து.ந.க.த.இ.எண்.06743/2008**
**ஆணையரின் 20.08.2008 நாளிட்ட குறிப்பு**

**27.08.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :470/2008 பொருள் எண்.64

**சொத்துவரி சீராய்வுக்கான சில தெளிவுரைகள்**

அரசாணை (நிலை) எண் 110, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள் 23.6.2008.அரசாணையின்படி பொதுசீராய்வு 01.04.2008 மாநகராட்சிகளில் மேற்கொள்ளப்படலாம் எனவும், இச்சீராய்வு தற்போது நடைமுறையிலுள்ள சட்டப்பிரிவுகள், விதிகள் மற்றும் இச்சீராய்வு குறித்து நெறிமுறைகள் ஒரே மாதிரியான கட்டண விகிதத்தை உறுதி செய்யும்பொருட்டு இச்சீராய்வு அமையவேண்டும். மேலும் 1/2008–09 முதல் அறிவித்த சொத்துவரி சீராய்வு விதிமுறைகள், தேவையானால் மட்டுமே, உள்ளாட்சி மற்றும் மாநகராட்சி அமைப்புகள் பின்பற்றலாம் என தமிழக அரசு அறிவித்தது. அதன்படி 0% முதல் 25% வரி உயர்வு இருக்கலாம். இதனையொட்டி சென்னை மாநகராட்சியில் பின்வரும் இரு முடிவுகளில் எதனை செயல்படுத்தலாம் என மாமன்றம் முடிவெடுக்க வேண்டி கோப்பு சமர்ப்பிக்கப்படுகின்றது. வரிஉயர்வு 0% முதல் 25% வரையில் செய்வதா? அல்லது செய்கின்றபட்சத்தில் எவ்வளவு சதவிகிதம்? ஏற்கனவே நடைமுறையில் உள்ள அடிப்படை கட்டணம் உயர்த்தப்படவில்லை. இதன் பொருள் குறித்து தீர்மானம் வேண்டியும், மாமன்றத்தின் அனுமதி வேண்டியும் சமர்ப்பிக்கப்படுகிறது.

சென்னை மாநகராட்சியில் 1993 ல் பொதுசீராய்வு (GS) செய்யப்பட்டு, 1998 ல் பொது மறுசீராய்வு (GRS) செய்யப்பட்டது. அதன் பிறகு 2007–2008 ஆம் ஆண்டில் வரி சரிபார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

இதனடிப்படையில் தற்போதைய வரி கணக்கீட்டு முறையை காணும் பொழுது கீழ்கண்ட தெள்ளத்தெளிவான கருத்துருக்கள் எவ்வித வரி உயர்வோ அல்லது மாற்றமோ இன்றி செயல்படுத்தத்தக்கவையாகவும், சென்னை மாநகர மக்கள் எளிதில் விளங்கி கொள்ளத்தக்கவையாகவும் இருக்கும் என்கின்ற அடிப்படையில் வரிவிதிப்பு குழுமத்திற்கு மாமன்றத்திற்கு பரிந்துரைப்பதற்காக ஆணையாளர் அவர்களின் மேலான பரிசீலனைக்காகவும் ஒப்புதலுக்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. <u>ஏற்கனவே உள்ள கட்டிடங்களில் சேர்த்து கட்டப்பட்ட கூடுதல் கட்டிடங்களுக்கு வரி கணக்கிடுதல் :–</u>

இந்நிகழ்வுகளில் கூடுதலாக கட்டப்பட்ட பரப்பிற்கு சதுரஅடிக்கு அடிப்படை கட்டணம் மூலம் பெருக்கி ஏற்கனவே பொதுமறுசீராய்வில் (GRS) விதிக்கப்பட்ட சொத்து வரியுடன் சேர்த்து கணக்கிடலாம்

2. <u>கட்டிடத்தின் உடமை / உபயோக தன்மை மாறுபடுகின்ற நேர்வு :–</u>

சொத்தின் உடமை தன்மை மாறும் பொழுது (உரிமையாளர்⇔வாடகைதாரர்) 25 சதவிகிதத்திற்கு குறைத்தோ (உரிமையாளர்), கூட்டியோ (வாடகைதாரர்) கணக்கிடலாம். சொத்தின் உபயோக தன்மை மாறுபடுகையில் (குடியிருப்பு⇔வணிக, பிற உபயோகங்கள்) சதுர அடிக்கான அடிப்படை கட்டணம் பட்டியலிலிருந்து அந்த பகுதி எது பொருந்துமோ அந்த மதிப்பினை உபயோகப்படுத்தி (Basic Rate) வரி கணக்கிடலாம்.

3 எல்லா சொத்துக்களுக்கும் 1993–94ம் ஆண்டு நடைபெற்ற சொத்துவரி சீராய்வில்(G.S.) கட்டிடத்தின் வயதிற்கு ஏற்ப வரி சலுவை வழங்கப்பட்டது. இந்த வகையிலான கட்டிடத்தின் வயதிற்கான வரி சலுகை பொது சீராய்வு மேற்கொள்ளப்படும்பொழுது மட்டுமே நிகழும். மற்ற சாதாரண வரிவிதிப்பு நிகழ்வுகளில் கட்டிடத்தின் வயதிற்கான வரி சலுகை வழங்கும் வாய்ப்பு இல்லை.

**வ.து.ந.க.த.இ.எண்.06743/2008**

4. தற்பொழுது சொத்துவரி அறிவிப்பு ஆணையில் பரப்பளவு, உபயோகத்தன்மை, ஆண்டு மதிப்பு மற்றும் சொத்துவரி குறிப்பிடப்பட்டு இருக்கும். சொத்துவரி கணக்கிடும்பொழுது பரப்பளவு மற்றும் அடிப்படை கட்டணத்தை பெருக்கி மாத வாடகை(M.R.V.) மதிப்பிடப்படும். மாதவாடகை 10.92 என்ற இலக்கால் பெருக்கி ஆண்டு மதிப்பு (A.R.V.) கணக்கிடப்படும். ஆண்டு மதிப்பிலிருந்து 12.4 என்ற சதவிகிதத்திற்கு சொத்துவரி நிர்ணயிக்கப்படும். வரிவிதிப்பு முறையை எளிய வகையில் மற்றும் வெளிப்படையான முறையில் ஒரு சொத்து உரிமையாளர் தன்னுடைய சொத்திற்கான அரையாண்டு வரியை எளிதில் புரிந்துக்கொள்ளும் வகையில், பரப்பளவு X அடிப்படை கட்டணம் X 135% என்ற முறையில் வரியானது நேரடியாக கணக்கில் கொண்டு வழங்கப்படும். மேற்கூறிய வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் வரி உயர்வோ அல்லது பாதிப்போ இருக்காது. இப்பொருள்மீது மாமன்றத்தின் மேலான ஒப்புதலுக்கு நிலைக்குழு (வருவாய் மற்றும் நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

**21.8.2008** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண். **213/2008** , நாள்: 21.8.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"வரிவிதிப்பு தெளிவாக விளங்கும் வகையில் அடிப்படை கட்டணத்தில் 135% ஐ இணைத்து திருத்தம் செய்யப்பட்ட அடிப்படை கட்டணத்துடன் பரப்பளவை பெருக்கி சொத்து வரியை எளிய முறையில் கணக்கிடலாம் என்ற கருத்தின் அடிப்படையில் இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: வ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18.

மன்றச் செயலாளர்

**பொது.ந.க.எண். பி3/7455/08**
**ஆணையரின் 10.06.2008 நாளிட்ட குறிப்பு**

**27.08.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :471/2008 பொருள் எண்.65

**சென்னை மாநகராட்சி ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு அகவிலைப்படி வழங்கியமைக்கும், அரசாணை அமலாக்கத்திற்கும் பின்னேற்பு அனுமதி வேண்டி**

அரசாணை எண். 109, நிதி (ஓய்வூதியம்),துறை நாள் 22.03.2008 –ன் படி ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு 01.01.2008 முதல் 41 விழுக்காட்டில் இருந்து 47 விழுக்காடாக உயர்த்தி திருத்திய அகவிலைப்படி வழங்க ஆணையிடப் பட்டுள்ளது. இவ்வரசாணை உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பொருந்துமென அறிவிக்கப் பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் 14,091 ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்கள் உள்ளனர். இவ்வரசாணையை நடைமுறைப்படுத்தி திருத்தப்பட்ட அகவிலைப்படியை ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு, ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படி/குடும்ப ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதிய அகவிலைப்படி கணக்கிடப்பட்டு வழங்க ஒரு ஆண்டிற்கு ரூ. 2.88 கோடி செலவாகும். நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு மேற்கண்ட அரசாணை இவ்வலுவலக சுற்றறிக்கை பொ.து.ந.க.எண். பி3/7455/2008 நாள் 11.04.2008–ன் வாயிலாக சென்னை மாநகராட்சியில் அமலாக்கம் செய்யப்பட்டது.

எனவே, அரசாணை எண்.109, நிதி (ஓய்வூதியம்) துறை நாள் 22.03.2008–ன் படி திருத்தப்பட்ட அகவிலைப்படி 41 விழுக்காட்டிலிருந்து 47 விழுக்காடாக ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படி/குடும்ப ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதிய அகவிலைப்படி கணக்கிடப்பட்டு 01.01.08 முதல் சென்னை மாநகராட்சி ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு வழங்கியமைக்கு நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

21.8.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண். 189/2008 , நாள்: 21.8.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொது.ந.க.எண்.பி3/35405/07**
**ஆணையரின் 12.08.2008 நாளிட்ட குறிப்பு**

**27.08.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :472/2008 பொருள் எண்.66

**பணியமைப்பு – நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்கள் நல நிதி திட்டத்தின் கீழ் உள்ள ஆணைகள் – நகராட்சி மற்றும் மாநகராட்சி ஓய்வூதியதாரர்கள் மருத்துவ உதவி திட்டம் மற்றும் குடும்ப பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் உள்ள ஓய்வூதியதாரர்களுக்கு விரிவாக்கம் செய்வது குறித்து.**

அரசாணை எண் 378, நிதி(ஓய்வூதியம்)துறை, நாள் 13.10.2005 மூலம் மருத்துவ உதவித் திட்டத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்ட மேம்பட்ட சிறப்பு அறுவை சிகிச்சை மற்றும் மருத்துவம் அளிக்கப்படும் தனியார் மருத்துவமனைகளின் விவரங்கள் அடங்கிய பட்டியல் ஓய்வூதியர்கள் பயன்பெறும் வகையில் வெளியிடப்பட்டது.

மேற்படி ஆணையினை அமலாக்கம் செய்யும் பொருட்டு குறிப்பு சமர்ப்பிக்கப் பட்டதில் நிதி ஆலோசகரின் 05.12.2005 நாளிட்ட குறிப்பில் "13.10.2005 தேதியிட்ட நிதி (ஓய்வூதியம்)துறை அரசாணை எண் 378, தமிழ்நாடு அரசு ஓய்வூதியர்களின் நல நிதித்திட்டம் சம்பந்தமாக வெளியிடப்பட்ட ஆணை எனவே, இதனை நேரடியாக சென்னை மாநகராட்சி பணியாளர்களுக்கு அமலாக்கம் செய்யலாகாது. இவ்வரசாணை நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிப் பணியாளர்களுக்கு நீட்டுவிக்கப்படுவதற்கான ஆணைகள் ஏதேனும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையிலிருந்து பெறப்பட்டுள்ளதா என நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு எழுதி விவரம் பெற பொதுத்துறையை கோரலாம்'' என்று குறிப்பிட்டதை தொடர்ந்து இவ்வலுவலக கடித எண் பொது.ந.க.எண் பி3/35405/05, நாள் 21.12.2005 மற்றும் 09.01.08 மூலம் மேற்குறிப்பிட்ட அரசாணையை மாநகராட்சி ஓய்வூதியர்களும் பயன்பெறும் வகையில் நீட்சி செய்து வழங்க அரசிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

அரசு கடித எண் 1765/மாந4/2008–1, நாள் 08.04..2008ல் அரசு ஓய்வூதியர்களுக்கு குடும்ப பாதுகாப்பு திட்டம் மற்றும் மருத்துவ உதவி திட்டம் தொடர்பாக அரசு நிதி துறையால் அவ்வப்போது வெளியிடப்படும் ஆணைகள் சென்னை மாநகராட்சி உள்ளிட்ட அனைத்து மாநகராட்சி மற்றும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகராட்சி ஓய்வூதியதாரர்களுக்கும் பொருந்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட அரசாணையினை சென்னை மாநகராட்சியில் ஓய்வூதியதாரர்களுக்கு அரசாணை வெளியிடப்பட்ட நாளிலிருந்து நடைமுறைப்படுத்த நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

21.8.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண். 190/2008 , நாள்: 21.8.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**வ.து.ந.க.எண்.அ1/20847/2000**
**ஆணையரின் 14.8.2008 நாளிட்ட குறிப்பு**

**27.08.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :473/2008 பொருள் எண்.67

**வரிமதிப்பீட்டாளர் மற்றும் உரிமம் ஆய்வாளர்களுக்கு பயணப்படி வழங்குதல்**

அரசு நிலை எண் 444 நிதி (ஊதியக்குழு) துறை நாள் 31.8.98ன்படி 1.9.98 முதல் நடைமுறையில் உள்ள நிலையான பயணப்படியின் தொகை இரட்டிப்பாக அளிப்பதற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி வருவாய்த் துறையில் பணிப்புரியும் வரிமதிப்பீட்டளார்கள் மற்றும் உரிமம் ஆய்வாளர்கள் தங்கள் பணியின் தன்மையை விளக்கி தங்களுக்கும், உதவி பொறியாளர் / இளநிலைப் பொறியாளர்களுக்கு இணையாக நிலையான பயணப்படியை வழங்குமாறு கோரியுள்ளனர்.

தற்போது சென்னை மாநகராட்சி வருவாய்த் துறையில் 85 வரிமதிப்பீட்டாளர்களும் 50 உரிமம் ஆய்வாளர்களும் பணிப்புரிந்து வருகின்றனர். இவர்களுக்கு அரசாணையின்படி அறுதியிட்ட பயணப்படியாக மாதம் ரூ.50/– வழங்கப்படுகிறது. வரிமதிப்பீட்டாளர்களில் சிலர் ஒரு வார்டிலும், சிலர் இரண்டு வார்டுகளில், வரிமதிப்பீடு செய்யும் பணியை செய்து வருகின்றனர். மேலும் வரிமதிப்பீட்டாளர்கள், தங்கள் பொறுப்பில் பணிப்புரியும் வரிதண்டலர்களின் பணியையும் மேற்பார்வையிட்டு வருகின்றனர். வரிமதிப்பீட்டாளர்கள் பலர், தம்முடைய வார்டுகளில் உள்ள சொத்து உரிமையாளர்கள் சிலர் இதர வார்டுகளில் குடியிருப்பதால், சிலர் நகருக்கு வெளியே குடியிருப்பதாலும், சொத்து வரியை வசூலிக்கும்பொருட்டு சொத்து உரிமையாளர்களை தேடிச்செல்கின்றனர். இதனால் வரிமதிப்பீட்டளார்கள் நாள்தோறும் நெடுந்தூரம் பயணம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதேபோல் உரிமம் ஆய்வாளர்கள் ஒவ்வொருவரும் சராசரியாக மூன்று வார்டுகளிலும் சிலர் மூன்றுக்கு மேற்பட்ட வார்டுகளிலும் தங்கள் பணியை மேற்கொள்வதால் இவர்களும் நாள்தோறும் நெடும் பயணம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. தொழில் வரியை வசூல் செய்யும்பொருட்டு இவர்கள் ஒவ்வொரு வர்த்தக நிறுவனத்திற்கும் செல்ல வேண்டியுள்ளது. இப்பணிகளுக்காக மாதந்தோறும் இவர்களுக்கு அளிக்கப்படும் அறுதியிட்ட பயணப்படி ரூ.50/– மட்டுமே, ஆனால் ஒரே ஒரு வார்டை மட்டும் பொறுப்பில் கொண்டு பணியாற்றி வரும் உதவி பொறியாளர் / இளநிலைப் பொறியாளருக்கு மட்டும் மாதம் ரூ.230/– நிலையான பயணப்படியாக வழங்கப்பட்டு வருவது மிகவும் வேறுபாடாகத் தெரிகிறது. ஏனெனில் வரிமதிப்பீட்டாளர், உரிமம் ஆய்வாளர் மற்றும் உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர் ஆகிய மூன்று பதவிகளும் சென்னை மாநகராட்சி பணியமைப்பில் பிரிவு–3 என வரையறுக்கப்பட்டுள்ளன. ஆனால் ஒவ்வொரு பதவிக்கும் உள்ள ஊதிய விகிதங்களில் மட்டும் சிறு வேறுபாடுகள் உள்ளன. அவற்றின் விவரம்.

| | |
|---|---|
| உரிமம் ஆய்வாளர் | : ரூ.5000 – 150 – 8000 |
| வரிமதிப்பீட்டாளர் | : ரூ.5300 – 150 – 8300 |
| இளநிலை பொறியாளர் | : ரூ.5500 – 175 – 9000 (பட்டதாரி) |
| உதவி பொறியாளர் | : ரூ.6500 – 200 – 9900 (பட்டதாரி) |

துணை ஆணையர்(வ.ம.நி) அவர்கள் கருத்துக்கிணங்க, தமிழகத்தில் உள்ள பிற மாநகராட்சிகளில் இப்பதவியில் பணிப்புரியும் ஊழியர்களுக்கு நிலையான பயணப்படி எவ்வளவு வழங்கப்படுகிறது என்ற விவரம் கோரி திருச்சி, நெல்லை, மதுரை மற்றும் கோவை மாநகராட்சிகளுக்கு கடிதம் எழுதப்பட்டது. நெல்லை மாநகராட்சியில் உரிமம் ஆய்வாளர் மற்றும் வரிமதிப்பீட்டாளர் ஆகிய பணியிடங்கள் இல்லை என அதன் உதவி ஆணையர் (வ) அவர்கள் தனது 11.5.2001 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார். கோவை மாநகராட்சியில் வரிமதிப்பீட்டாளர் பதவிகள் இல்லை என்றும் 20 ஆண்டு பணி முடித்த வரிவசூலர்கள், வரி ஆய்வாளர் (சிறப்பு) என நியமிக்கப்பட்டு ரூ.50/– வாகனப்படி வழங்கப்பட்டு வருவதாக உதவி ஆணையர்(வ) அவர்கள் தனது 15.5.2001 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார். திருச்சி மதுரை ஆகிய மாநகராட்சிகளிலிருந்து பதில் பெறப்படவில்லை.

சென்னை மாநகராட்சி தமிழகத்தில் முதன் முதலாக தோற்றுவிக்கப்பட்ட மாநகராட்சியாகும். இது ஏறக்குறைய 300 ஆண்டுகளாக இயங்கி வருகிறது. இங்குள்ள பதவியிடங்கள் ஏனைய மாநகராட்சியில் இருக்க வாய்ப்பில்லை. விவரம் அளித்துள்ள மாநகராட்சிகளில் உரிமம் ஆய்வாளர் மற்றும் வரிமதிப்பீட்டாளர் பதவியிடங்கள் இல்லை

என தெரிய வருகிறது. எனவே, இப்பதவியிடங்கள் திருச்சி மற்றும் மதுரை மாநகராட்சிகளில் இருக்க வாய்ப்பில்லை. ஆகையால் கிடைத்துள்ள தகவல்கள் அடிப்படையில் இக்கோப்பினை பரிசீலனை செய்யலாம்.

சென்னை மாநகராட்சியில் பணிப்புரியும் உதவி பொறியாளர் / இளநிலைப் பொறியாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் பகுதியின் பரப்பளவைவிட, வரிமதிப்பீட்டாளர்களுக்கும், உரிமம் ஆய்வாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் பகுதியின் பரப்பளவு மிக அதிகமாக உள்ளதால், உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளருக்கு இணையாக அறுதியிட்ட பயணப்படியான ரூ.230/-ஐ வரிமதிப்பீட்டாளருக்கும், உரிமம் ஆய்வாளர்களுக்கும் வழங்கலாம். இதனால் சென்னை மாநகராட்சிக்கு கூடுதலாக ஆண்டொன்று ரூ.3,72,600/- செலவாகும் என்பதால் இதை மாநகராட்சி நிதியில் இருந்து ஏற்கலாம்.

மேலும் நடந்த மூன்று வருடங்களாக களப் பணியாளர்கள் சொத்துவரி வசூல் மற்றும் தொழில்வரி வசூலில் இலக்கைக்காட்டிலும், அதிக வசூல் செய்துள்ளனர். மூன்று வருடங்களில் சொத்துவரி மற்றும் தொழில்வரி கேட்பு மற்றும் வரிவசூல் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வரி விவரம் | காலம் | கேட்பு | வசூல் (கோடிகளில்) | வரிவசூல் சதவீதம் % |
|---|---|---|---|---|
| **சொத்து வரி** | 2005-06 | 260.00 | 218.00 | 83.87% |
| | 2006-07 | 270.00 | 231.94 | 85.90% |
| | 2007-08 | 280.00 | 291.26 | 104.02% |

| வரி விவரம் | காலம் | கேட்பு | வசூல் (கோடிகளில்) | % |
|---|---|---|---|---|
| **தொழில்வரி** | 2005-06 | 45.00 | 57.28 | 127.29% |
| | 2006-07 | 61.00 | 63.62 | 104.28% |
| | 2007-08 | 63.00 | 75.00 | 119.05% |

| **உரிமம்** | காலம் | வசூல் (கோடிகளில்) |
|---|---|---|
| | 2005-2006 | 2.85 |
| | 2006-2007 | 3.22 |
| | 2007-2008 | 3.25 |

எனவே, சென்னை மாநகராட்சியில் பணிப்புரியும் இளநிலைப் பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர்களுக்கு இணையாக நிலையான வாகனப்படி ரூ.230/-ஐ சென்னை மாநகராட்சி வருவாய்த் துறையில் பணிப்புரியும் உரிமம் ஆய்வாளர் மற்றும் வரிமதிப்பீட்டாளர் ஆகியோருக்கு வழங்கவும், இதனால் ஏற்படும் செலவினத்தை சென்னை மாநகராட்சி ஏற்கவும், இது குறித்து அரசின் அனுமதி வேண்டி அரசுக்கு எழுதவும் நிலைக்குழு வரிவிதிப்பு மற்றும் நிதி மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"21.08.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.209/2008, நாள்.21.08.2008ன்படி வரி வசூலிப்பவர்களுக்கும் பயணப்படி வழங்க நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: வ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ-18. மன்றச் செயலாளர்

**மி.து.ந.க.எண்.உ.கோ.பொ/தொ.நு/3955/2008**
**ஆணையர் அவர்களின் 12.8.2008 நாளிட்ட குறிப்பு**

**27.08.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :474/2008 பொருள் எண்:68

**மின் சிக்கன நடவடிக்கைகள்**

அரசு துணை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்கள் தமது 29.7.2008 நாளிட்ட கடிதத்தில் கீழ்கண்ட மின்சார சிக்கன நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளார்.

1) தேவையற்ற ஒளிரும் மின் விளக்கு மற்றும் இயங்கும் மின் விசிறிகளை நிறுத்தி வைக்கவும், தேவையின் போது மட்டுமே உபயோகிக்கவும்

2) குளிர்பதன அறையின் வெப்ப நிலை 22 C (71.5 F) அளவிற்கு மேல் பராமரிக்கப்படும் ஒவ்வொரு டிகிரி 'C' க்கும் மூன்று முதல் ஐந்து விழுக்காடு வரை மின் சிக்கனம் ஏற்படுகின்றது. எனவே குளிர்பதன கட்டுப்பாட்டினை 22 C (71.5 F)இல் பராமரிப்பதன் மூலம் நிறைவான வசதியை குறைந்த மின் செலவில் பெற முடியும்.

3) கனிணி மற்றும் அலுவலக பயன்பாட்டுக் கருவிகளை உபயோகப்படுத்ததாத பொழுது நிறுத்தி வைக்கவும்,

4) நகலெடுக்கும் கருவிகளை (Photo Copiers) குறிப்பிட்ட நேரங்களில் மட்டும் பயன்படுத்துங்கள். பல்வேறு நகலெடுக்கும் பணிகளை ஒருங்கிணைந்த பின்னர் நகலெடுக்கும் கருவிகளை உபயோகிக்கவும்

மேற்கண்ட அறிவுரைகளை கடைபிடிக்க அனைத்து துறைகளும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

ரிப்பன் கட்டிட வளாகத்தில் மின் சிக்கனத்தை மேற்கொள்ள மின்சாரத்தை சிக்கனப்படுத்தும் வழி முறைகளை கண்டறிய கலந்தாய்வரிடம் பணி ஒப்படைக்கப்பட்டு கீழ்கண்ட கருத்துக்கள் பெறப்பட்டுள்ளன.

1) புளோரசன்ட் குழல் விளக்குகளுக்கு பதிலாக CFL வகை விளக்குகள் அமைக்கப்பட வேண்டும்

2) பல்வேறு துறைகளில் மின்சார சிக்கன உபகரணங்கள் பயன்படுத்தப்படவேண்டும்.

மேற்கூறப்பட்டுள்ள கருத்துகளின் அடிப்படையில், CFL வகை விளக்குகள் அமைக்கவும், KVAR நிலைபடுத்தும் உபகரணங்கள் (Power Factor Improvement Capacitor) அமைக்கவும் இன்னும் பிற முறைகளில் மின் சிக்கனம் ஏற்படுத்திட கீழ்கண்டவாறு திட்டமிடப்பட்டுள்ளது.

1) சென்னை மாநகராட்சி பூங்காக்களில் மரங்கள் இல்லாத பகுதியில் சூரிய சக்தி மூலம் இயக்கப்படும் விளக்குகள் (SOLAR LIGHTS) அமைக்கவும், குறைந்த வாட்ஸ் திறனுள்ள CFL வகை விளக்குகள் பயன்படுத்தவும்,

2) சென்னை மாநகராட்சி அலுவலக கட்டிடங்களில் புளோரசன்ட் குழல் விளக்குகளுக்கு மாற்றாக, ஏற்கனவே உள்ள ஒளித்திறன் குறையாமல் குறைந்த வாட்ஸ் CFL வகை விளக்குகள் அமைத்து மின் சிக்கனம் கடைப்பிடிக்கவும்,

**மி.து.ந.க.எண்.உ.கோ.பொ/தொ.நு/3955/2008**

3) பேருந்து சாலைகளில் உள்ள தெரு விளக்குகளில் மின்சாரம் சேமிப்பதற்கான 7KVA, 4KVA, 3KVA திறன் கொண்ட மின் சிக்கன உபகரணங்கள் தருவிக்கப்பட்டு உபயோகப்படுத்தப்பட உள்ளன.

எனவே, மேற்குறிப்பிட்ட மின்சாரம் சேமிப்பதற்கான நடவடிக்கைகளை சென்னை மாநகராட்சியில் அமல்படுத்துவதற்கான கொள்கை முடிவுகளை எடுத்திட மாமன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

“18.8.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.243/2008, நாள்:18.8.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“21.8.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண். 193/2008 , நாள்: 21.8.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மி.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ1/1206/2008**
**ஆணையரின் 08.08.2008 நாளிட்ட குறிப்பு**

## 27.08.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :475/2008 பொருள் எண்.69

**பிராடிஸ் கேசில் சாலைக்கு பெயர் மாற்றம்**

திரு.டாக்டர். பால் தினகரன், இயேசு அழைக்கின்றார் நிறுவனம், 16, கிரின்வேஸ் ரோடு, ஆர். ஏ.புரம், சென்னை–600 028. அவர்கள் சென்னையில் ஏறக்குறைய 30 வருடங்கள் "கிரின் வேஸ் சாலையில் இருக்கும் வளாகத்திலிருந்து தன் தந்தை சகோதரன் டி.ஜி.எஸ். தினகரன் பணிபுரிந்து உள்ளார் என்றும், பூந்தமல்லி நெடுஞ்சாலையிலுள்ள வானகரத்திலும் அவர்கள் நினைவு மண்டபத்தை இலட்சக்கணக்கான மக்கள் காணும்படி கட்ட தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்து, இவ்விரண்டு இடங்களில் ஏதேனும் ஒரு இடத்தில் அன்னாரின் பெயரை ஒரு சாலைக்கு சூட்ட கோரியுள்ளார். மனுதாரரின் கடிதத்தில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் அரசுச் செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் ஆணையர் சென்னை மாநகராட்சி அவர்களை பேசுமாறு உத்தரவிட்டுள்ளார்.

அரசாணை (ப) எண்.573 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 14.12.2001–ல் மாநகராட்சி நகராட்சி, மற்றும் பேரூராட்சிகளுக்கு சொந்தமான கட்டிடங்கள், சாலைகள், தெருக்கள், பேருந்து நிலையங்கள் முதலியவற்றிக்கு பெயர் வைப்பது அல்லது பெயர் மாற்றுவது போன்ற தீர்மானங்கள் தவிர்க்க வேண்டும் என்ற தற்போதுள்ள அரசாணையை தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்–10–ல் வார்டு குழுவில் இப்பொருள் சமர்ப்பித்து உரிய தீர்மானம் பெற்று அனுப்புமாறு மண்டல அலுவலர் 10 அவர்களை கோரப்பட்டது. மேற்படி பொருள் தொடர்பாக கீழ்க்கண்ட மூன்று சாலைகளில் ஒன்றுக்கு திரு. டி.ஜி.எஸ். தினகரன் அவர்களின் பெயரைச் சூட்ட

1. கிரீன்வேஸ் சாலை, துர்காபாய் தேஷ்முக் சாலை சந்திப்பிலிருந்து அப்பேத்கார் மணி மண்டபம் வரை
2. கிரீன்வேஸ் சந்து (மாநகராட்சி விளையாட்டு மைதானம் எதிரில் உள்ள முட்டு சந்து)
3. பிராடிஸ் கேசில் சாலை (மாநகராட்சி மைதானத்தின் கிழக்குப் பக்கம் உள்ளது)

விவாதித்து முடிவெடுத்து உரிய தீர்மானம் கோரி இப்பொருளை மண்டலம்–10–ல் தன் வார்டு குழுவில் சமர்ப்பித்தது. இதனை ஏற்று கொள்ளப்பட்டது என 10வது வார்டு குழு தீர்மானித்துள்ளது. இப்பொருளில் திரு. டி.ஜி.எஸ். தினகரன் அவர்களின் பெயருக்கு பதிலாக மனுதாரரின் பெயரை தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், மூன்று சாலைகளில் எந்த சாலைக்கு திரு. டி.ஜி.எஸ். தினகரன், அவர்களின் பெயரை சூட்டுவது தொடர்பாக 10வது வார்டு குழு குறிப்பிட்டு தீர்மானிக்கவில்லை .

மேற்படி தீர்மான பொருளில் குறிப்பிட்டுள்ள 3 சாலைகளில் கிரீன்வேஸ் சாலையின் ஒரு பகுதி முன்னர் பி.எஸ்.குமாரசாமி ராஜா சாலை என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. கிரீன்வேஸ் சந்து மிகவும் குறுகிய முட்டு சந்தாக உள்ளது. பிராடிஸ் கேசில் சாலை, திரு. டி.ஜி.எஸ். தினகரன் அவர்கள் ஜெபம் நடத்தி வந்த ஜெபகோபுரத்திற்கு எதிரில் உள்ளதால், பிராடிஸ் கேசில் சாலைக்கு டி.ஜி.எஸ். தினகரன் சாலை என பெயர் மாற்றம் செய்வதற்கு அரசின் உத்தரவினை கோர, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

21.8.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.188/2008 , நாள்: 21.8.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: நி.ம.உ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.து.ந.க.எண்.அ1/1091/2008**
**ஆணையாளர் அவர்களது 07.08.2008 நாளிட்ட குறிப்பு**

**27.08.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :476/2008 பொருள் எண்.70

**நிலைக்குழு (கல்வி) உறுப்பினர் நிலைக்குழு (கல்வி) கூட்டத்திற்கு வருகை புரியாமை**

நிலைக்குழு (கல்வி) உறுப்பினர் திரு.என்.அன்பழகன் (வார்டு—147) அவர்கள் 07.05.2008, 09.06.2008, 07.07.2008 மற்றும் 06.08.2008 ஆகிய நாட்களில் நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்திற்கு வருகைபுரியவில்லை.

இதுகுறித்து தெரிவிப்பது யாதெனில் சென்னை மாநகராட்சி முனிசிபல் கார்ப்பரேஷன் சட்டவிதி 1919 பிரிவு 31 அட்டவணை 11 இனம் 20ன்படி நிலைக்குழு கூட்டத்திற்கு தொடர்ந்து நான்கு மாதங்களுக்கு மேல் வராத உறுப்பினர்களின் பதவியை பறிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மன்றத்தின் முடிவின்படி அவரை மீண்டும் தேர்ந்தெடுக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

திரு. என்.அன்பழகன், மன்ற உறுப்பினர், வார்டு—147, அவர்கள் நிலைக்குழு (கல்வி) கூட்டங்களுக்கு தொடர்ந்து நான்கு மாதங்களுக்கு வருகை புரியாத காரணத்தால், விதிகளின்படி இவ்விவரத்தை மன்றத்திற்கு தெரிவித்து இதுகுறித்து மன்றம் உரிய முடிவெடுக்க சமர்ப்பிக்கப்படுகிறது.

> அனைத்து கட்சி மன்ற உறுப்பினர்களின் கருத்தின் அடிப்படையில் இம்மன்ற உறுப்பினரை நிலைக்குழு (கல்வி) உறுப்பினராக தொடர்ந்து நீடிக்க மன்றம் அனுமதி அளிக்கின்றது''

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ—18. மன்றச் செயலாளர்

**ம.து.ந.க.எண்.அ1/1069/2008**
**ஆணையரின் 21.08.2008 நாளிட்ட குறிப்பு**

**27.08.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :477/2008 பொருள் எண்.71

**மன்றத் தீர்மானம் திரும்ப பெறுதல்**

28.07.2004 அன்று நடைபெற்ற சென்னை மாநகராட்சி மன்றக் கூட்டத்தில் முன்னாள் சேப்பாக்கம் சட்ட மன்ற உறுப்பினரும், தற்பொழுதைய தமிழக முதலமைச்சர் அவர்கள் தனது சேப்பாக்கம் சட்ட மன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டம் கட்ட நடத்திய விழாவினை சென்னை மாநகராட்சி அனுமதி பெறாமல் நடத்தியதாக கடந்த கால மன்றத்தில் கண்டன தீர்மானம் நிறைவேற்றப்பட்டது குறித்து உரிய முடிவு எடுக்க அரசு செயலர் பார்வையில் கண்டுள்ள கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து தெரிவிப்பது யாதெனில் மேற்படி தீர்மானம் எந்தவித பொருள் எண்ணோ, துறை மூலமாக எவ்வித குறிப்போ இன்றியும், உரிய முறையில் சமர்ப்பிக்கப்படவில்லை என்றும், இந்த தீர்மானத்தை திரும்பபெறும் அதிகாரம் மன்றத்திற்குதான் என்றும் தெரிவித்து மேயர் அவர்கள் இசைவளிப்பின் சென்னை மாநகராட்சி, முனிசிபல் கார்ப்பரேஷன் சட்டம் 1919 பிரிவு 31 விதி 10 அட்டவணை –II ன்படி மன்றம் இந்த தீர்மானத்தை திரும்ப பெறலாம் என கேட்டுக்கொள்ளப்பட்டதின் அடிப்படையில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் இந்த தீர்மானத்தை திரும்பபெற நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில் எவ்வித பொருள் எண்ணோ, துறை மூலமாக எவ்வித குறிப்பும் இன்றியும், உரிய முறையில் சமர்ப்பிக்கப்படாமல் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக 28.07.2004 மன்றக் கூட்டத்தில் சேப்பாக்கம் சட்ட மன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட கட்டிட விழா சம்மந்தமாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மீது எவ்வித விதிகளையும் பின்பற்றாமல் கொண்டுவரப்பட்ட கண்டன தீர்மானத்தை திரும்ப பெற மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ7/2304/2007</u>
<u>ஆணையரின் 16.07.2008 நாளிட்ட குறிப்பு</u>

<u>27.08.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>

தீர்மான எண் :478/2008 பொருள் எண்:72

<u>வணிக வளாகம்</u>

சென்னை மாநகராட்சியில் உள்ள 111 வணிக வளாகங்களில் சுமார் 5644 கடைகள் மாத வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

மேற்கண்ட கடைகளுக்கு மன்றத் தீர்மானத்தின் அடிப்படையில் உட்புறச் சாலைகளுக்கு சதுர அடி ஒன்றுக்கு ரூ.5/– எனவும், பிரதான சாலைகளுக்கு ரூ.10/– எனவும் மாதவாடகை அடிப்படையில், 12 மாதங்கள் மட்டும் ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது.

அரசாணை (நிலை) எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 03.07.2007–ன்படி குத்தகை நிபந்தனைகளை செயல்படுத்துகையில் எழும் நடை முறை பிரச்சனைகள் பற்றிய மதிப்பீட்டின் அடிப்படையிலும், நகராட்சி சொத்துக்களை குத்தகை விடுவதற்கான நடைமுறையை எளிமைப்படுத்தும் நோக்கிலும் பின்வரும் நடைமுறைகளை பின்பற்றலாம் என்ற அரசு தெரிவித்துள்ளது.

1. முதல் தடவையாக குத்தகைக்கு விடப்படும் போது நகராட்சியின் அசையா சொத்துக்கள் அனைத்தும் பொது ஏலத்தின் மூலமாக குத்தகைக்கு விடப்படவேண்டும் என்றும்,

2. நகராட்சிக் கடைகள், ஒரே நேரத்தில் மூன்றாண்டு காலத்திற்கு குத்தகைக்கு விடப்படலாம். மூன்று ஆண்டுகளை கொண்ட ஒரு தொகுப்பு கால அளவு முடிவடைதன் பேரில் அக்குத்தகை தன்னியல்பாகவே (Automatically) புதுப்பிக்கப்படும். இவ்வாறாக ஒன்பது ஆண்டுகள் வரையில் புதுப்பிக்கப்படும் என்றும் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை குத்தகை தொகை 15 விழுக்காடு உயர்த்தப்படும்.

3. ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்னர் குத்தகை வாடகை மதிப்பீடு செய்யப்பட வேண்டும். திருத்தியமைக்கப்பட்ட குத்தகை வீதத்தில், மேற்கொண்டு 9 ஆண்டுகளுக்கு குத்தகை கால அளவை நீட்டித்துக் கொள்ள முன்னுரிமை அளிக்கலாம் என்றும், ஒப்புக் கொள்ளவில்லை என்றால் அச்சொத்து பொது ஏலத்தின் மூலம் குத்தகைக்கு விடவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

எனவே, இந்த அரசாணையை மாநகராட்சிக்கு அமலாக்கம் செய்வது தொடர்பாக மாநகராட்சி கடைகளின் ஒதுக்கீடு விபரங்கள் குறித்து இவ்வலுவலக பதிவேடுகள் மற்றும் கோப்புகள் பரிசீலிக்கப்பட்டது. மொத்தம் 971 கடைகளுக்கான ஒதுக்கீடு விபரங்கள் மட்டும் கிடைக்கப் பெற்றது. மீதமுள்ள கடைகளில் 2487 கடைகள் காலி இடமாக ஒதுக்கீடு செய்யப்பட்டவை (தரை வாடகை).

| | | |
|---|---|---|
| மொத்த கடைகள் | .. | 5644 |
| 1. 1999 முதல் 2008 வரை ஒதுக்கீடு செய்யப்பட்ட கடைகள் | .. | 971 |
| 2. காலி இடமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட கடைகள் | .. | 2487 |
| 3. ஒன்பது ஆண்டுகளுக்கு மேற்பட்டு, ஒதுக்கீடு ஆணைகள் இன்றி செயல்படும் மொத்த கடைகள் | .. | 2186 |

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ7/2304/2007**

ஒதுக்கீடு விபரங்கள் கிடைத்த கடைகள் தவிர ஏனைய கடைகளில் உரிய ஒதுக்கீடு ஆணைகள் இன்றியும் முறையற்ற அனுபவிப்பாளர்களும் தற்போது ஆக்கிரமித்து உள்ளனர். இவர்களிடம் கடையை உபயோகிப்பதற்காக மன்றத் தீர்மானத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகை மட்டுமே வசூலிக்கப்பட்டு வருகிறது. மேலும், பல அனுபவிப்பாளர்கள் உரிய தொகையை செலுத்துவதில்லை. எனவே, ஒதுக்கீடு விபரங்கள் கிடைக்காத கடைகள் அனைத்தையும் 9 வருடங்களுக்கு மேற்பட்டவையாக பாவித்து அவற்றை ஒழுங்குபடுத்தும் விதமாக, புதிய சந்தை மதிப்பின் அடிப்படையில் கடைகளை ஏலத்திற்கு கொண்டு வரவேண்டியுள்ளது.

எனவே, மேற்குறிப்பிட்டுள்ள 9 ஆண்டுகளுக்கு மேற்பட்டுள்ள கடைகளை ஏலத்திற்கு கொண்டுவர மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

21.8.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண். 208/2008 , நாள்: 21.8.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: நிமஉது.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

## சென்னை மாநகராட்சியில் சிறப்பு சலுகை மூலம் காலி இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டதின் விவரம்

| வ.எண். | மண்டலம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட இடம் | கடைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | 2 | A பர்மா பஜார் | 207 |
| 2. | 2 | B பர்மா பஜார் | 173 |
| 3. | 2 | C பர்மா பஜார் | 88 |
| 4. | 2 | D பர்மா பஜார் | 15 |
| 5. | 2 | E பர்மா பஜார் | 10 |
| 6. | 2 | F பர்மா பஜார் | 71 |
| 7. | 2 | நியூ பர்மா பஜார் | 4 |
| 8. | 2 | SRO பஜார் | 33 |
| 9. | 2 | ஈவினிங் பர்மா பாஜர் | 188 |
| 10. | 2 | D1 பர்மா பாஜர் | 3 |
| 11. | 2 | C1 பர்மா பாஜர் | 3 |
| 12. | 3 | கண்ணப்பர் திடல் | 385 |
| 13. | 3 | நியூ மூர் மார்க்கெட் | 225 |
| 14. | 3 | என்.எஸ்.சி. போஸ் ரோடு | 794 |
| 15. | 3 | நாராயணப்பா ரோடு | 168 |
| 16. | 5 | நேத்தாஜி வணிக வளாகம் (அண்ணாநகர் 3வது அவென்யூ) | 34 |
| 17. | 5 | என்.எஸ்.கே. சாலை (காய்கறி அங்காடி) | 86 |
| | | மொத்தம் | 2487 |

## ABSTRACT

| Zone | 1999 | 2000 | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | Total |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | – | – | – | – | 1 | – | – | – | – | – | 1 |
| 2 | – | – | – | – | 1 | 1 | – | – | 1 | – | 3 |
| 3 | – | – | 305 | – | – | 16 | 7 | 3 | – | – | 331 |
| 4 | – | – | – | – | 5 | 2 | 3 | – | – | – | 10 |
| 5 | – | 34 | – | – | 3 | 10 | 6 | 4 | – | – | 57 |
| 6 | – | 15 | 12 | 4 | 5 | 10 | 4 | 3 | – | – | 53 |
| 7 | 5 | 3 | 3 | 4 | 5 | 10 | 7 | – | – | – | 37 |
| 8 | 11 | 7 | 2 | 4 | 30 | 59 | 7 | 18 | – | 131 | 269 |
| 9 | – | – | 9 | 3 | – | 121 | 15 | – | – | 27 | 175 |
| 10 | – | – | 7 | – | 5 | 11 | 3 | 8 | 1 | – | 35 |
| Total | 16 | 59 | 338 | 15 | 55 | 240 | 52 | 36 | 2 | 158 | 971 |